புதுச்சேரி அரசு
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்
3-வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரியவளாகம், அண்ணாநகர், புதுச்சேரி -5.
தொலைபேசி: 0413-2201256 தொலைநகல்: 0413-2203494

## பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் - அறிவிப்பு

இந்திய அரசின், சுற்றுசூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டிருக்கும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை, 2011 ன் படி புதுச்சேரி அரசு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களுக்கும் திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தயாரித்துள்ளது. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் செயல்படுத்தப்படும் அனைத்து செயல்களும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின் படி ஒழுங்குமுறைப்படுத்தப்படும். புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தீர்மானிக்கும் செயல்முறையின் ஒருபகுதியாக, உள்ளூர் மக்களின் குறைகளை அறிந்து கொள்ள பின்வரும் விவரத்தின் படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்ட விவரம் | கேட்புரையின் தேதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | புதுச்சேரி அரசு தயாரித்துள்ள காரைக்கால் மாவட்டத்திற்கான திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம். | 14.3.2018<br>காலை 11.00 மணி. | டணால் தங்கவேல் கலை அரங்கம் காரைக்கால். |

திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் நகல்கள் கீழ்கண்ட அலுவலகங்களில் கிடைக்கும், இதனை அனைத்து அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்:

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. காரைக்கால் நகராட்சி ஆணையர் அலுவலகம், காரைக்கால்.
3. திருமலையராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம், திரு பட்டினம்.
4. நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம், நிரவி.
5. கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம், கோட்டுச்சேரி.
6. நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம், நெடுங்காடு.
7. திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம், திருநள்ளாறு.
8. மாசுக் கட்டுபாடு குழுமம், காரைக்கால்.

திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் வரைவு நகல்கள் புதுச்சேரி மாசுக் கட்டு பாடு குழுமத்தின் http://dste.puducherry.gov.in/ppccmain.htm. என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துகளை பொதுமக்கள் தங்கள் கருத்துகளை கீழ் கண்ட முகவரிக்கு எழுத்து மூலமாக 30 நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டும்.

உறுப்பினர் செயலர்,
புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமம்,
3-வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரியவளாகம்,
அண்ணாநகர், புதுச்சேரி – 605005.
மின்னஞ்சல்: dste.pon@pon.nic.in

உறுப்பினர் செயலர்
புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமம்